2002 ஏப்ரல் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கொள்ளையர் பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்கு பாரத ஸ்டேட் வங்கி ஒரு இலட்சம் ரூபாய் வெகுமதி அறிவித்துள்ளது.

இந்த வழக்கை விரைவில் கண்டுபிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் கூறி அமைகிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)*

டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Privilege Matter *ஒன்று கொடுத்திருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இன்னும் நான் பார்க்கவில்லை. பார்க்கிறேன். திரு. லா. சந்தானம்.*

(ஈ) அருப்புக்கோட்டை அருகில் இருக்கங்குடி மாரியம்மன் கோயில் நில ஆக்கிரமிப்புகளை அகற்ற முயன்றபோது ஏற்பட்ட பிரச்சினை

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கங்குடியில் கோயில் நிலத்திலே கடைகள் வைப்பது சம்பந்தமாக சில பிரச்சினைகள் வந்ததாக நேற்றைக்குக்கூட இந்த அவையிலே பேசப்பட்டது. அந்தப் பிரச்சினைகளினுடைய உண்மை நிலை என்ன என்பது அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால், இந்த அவை அறிந்துகொள்ளும்படி அந்த நிகழ்ச்சிகளைச் சொல்வதற்கு அரசு முன்வருமா என்று · தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஏதாவது தகவல் இருந்தால் சொல்லலாம்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜனவரி மாதம் அருப்புக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த வருவாய்த் துறை அதிகாரிகள், இருக்கங்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் நுழைவாயில் பாதையில்*